# மாவை ஆலய உற்சவம் இல்லை;

## அபிஷேகமும் இல்லை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 18
இதழ் 137

யாழ்ப்பாணம் ஆனி 15 ஜூலை 5 செவ்வாய்க்கிழமை (29-6-71)

யாழ்ப்பாணம், செவ்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கொடியேற்ற உற்சவம் இம்முறையும் நடைபெறவில்லை,

பிரிவிகவுன்சில் அப்பீல் தீர்ப்பு வரும்வரையும் மற்றும் நீதிமன்றத்திலுள்ள ஆலயப் பிரவேசப் பிரச்னை சம்பந்தமான வழக்கு முடிவடையும் வரையும் வருடாந்த உற்சவம் நடைபெறுமென ஆதீன கர்த்தா அறிவித்திருந்தார். ஆனாலும் விசேஷ அபிஷேகம் பூஜை ஆகியவைகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததாகவும் ஆலயக் கதவுகளைப் பூட்டிவைத்துக்கொண்டு அபிஷேகமோ பூசையோ செய்வதற்குச் சட்டம் இடம் கொடுக்காதென்றும் ஆலயக் கதவுகளை திறந்துவிடவேண்டிய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படலாமென்றும் பொலிஸ் அதிகாரிகள் கூறியதைத் தொடர்ந்து நேற்று விசேஷ அபிஷேகமும் நடைபெறவில்லையென்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாஸ்கோ, ஜூன். 28

விண்வெளியில் சல்யூட் என்ற கலத்தில் பூமியை வலம்வந்துக் கொண்டிருக்கும் சோவியத் வீரர்களின் எடை ஒரு றாத்தல் அல்லது இரண்டு றாத்தல் அளவு அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 22 நாட்களாக அவர்கள் இதுவரை விண்வெளியில் இருந்துள்ளனர்.

## அரசியல் நிர்ணய சபையில்

# தமிழரசுக்கட்சியினர் இனி பங்குபற்ற மாட்டார்கள்

## எஸ். ஜே. வி. அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

**அரசியல்நிர்ணயசபை நடவடிக்கைகளில்தமிழரசுக்கட்சியினர் இனிமேல் கலந்துகொள்ள மாட்டார்கள்.**

**இத்தகவலை தமிழரசுக்கட்சித்தலைவர் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் வெளியிட்டார்.**

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 11-வது அடிப்படைத் தீர்மானத்துக்கு தமிழரசுக்கட்சியினர் சமர்ப்பித்த திருத்தம் தோல்வியடைந்ததையடுத்து அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்வதால் எதுவிதப் பயனுமில்லையென்றும் ஆனால் தமிழ் மக்களின் கௌரவத்தைக் காப்பாற்றுமுகமாக இனிமேல் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லையென முடிவெடுப்பதாகவும் அவர் ஓர் அறிக்கையில் கூறினர்.

புதிய அரசியல் திட்டத்தில் தமிழ்மொழிக்குரிய உரிமைபற்றிய அம்சத்தைசேர்க்கவேண்டும் என்ற எமது கோரிக்கையில் நியாயமில்லையென்று யாரும்சொல்லமுடியாது.

சிங்கள மொழிபற்றி அரசியல் அமைப்பில் திட்டவட்டமாகச் சொல்லப்படுகின்றது ஆனால்தமிழ்மொழி உரிமை பற்றிஅவ்வாறு உறதியெதுவும் இல்லை என்று திரு செல்வநாயகம் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

பிரதம மந்திரியின் அழைப்பை ஏற்று அரசியல் நிர்ணயசபையில் கலந்து கொள்ள நாங்கள் முடிவெடுத்தபொழுது கருத்துவேறுபாடுகள் இருந்தன எமது மக்களின் உரிமைகள் சம்பந்தமாகப் பல திருத்தங்கள் கொண்டுவந்தோம். பிரஜாவுரிமை, அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக நாங்கள் கொண்டுவந்ததிருத்தங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. சிக்கலான பிரச்னைகளை வாக்குப்பலத்தால் தீர்க்கமுனைவது சரியல்ல. பேச்சுவார்த்தைகள் மூலமே இதனைத் தீர்க்கவேண்டும்.

ஆனால் நாங்கள் நடத்திய பேச்சுக்களினுல் பயன் ஏற்படவில்லை. விட்டுக்கொடுத்து சமரசத்துக்கு வழிவதற்கு நாங்கள் தயாராய் இருந்தோம். எதிர்பார்த்த அளவு பயன் ஏற்படவில்லை.

அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை யென்ற முடிவுஎவரையும் குறைகூறுவதாகாது எமது மக்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக இந்த முடிவை நாம் எடுத்தோம் என்று திரு செல்வநாயகம் தெரிவித்துள்ளார்

**சனி - ஞாயிறு விடுமுறை**

## ஜூலை 9-ம் திகதி சட்டம் தாக்கல் செய்யப்படும்

கோட்டை, திங்கள்

மறுபடியும் சனி - ஞாயிறு தினங்களை வார இறுதி விடுமுறை தினங்களாக நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நகல் சட்டத்தை பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஜூலை 9-ம் திகதி தாக்கல் செய்வார்.

அன்றையதினம் சபையின் ஏனைய அலுவல்கள் யாவும் ஒத்தி வைக்கப்படும்.

இத்தகவலை ஆட்சிமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு கே. பி. ரட்னாயக்கா தெரிவித்திருக்கிறார்.

சனி-ஞாயிறு தினங்களைமீண்டும் வாரஇறுதி விடுமுறை தினங்களாக நடைமுறைக்கு கொண்டு வருவதென்றும் பௌர்ணமி தினத்தை விடுமுறை தினமாக அறிவிப்பதென்றும் நேற்று முன்தினம் அரசாங்கக்கட்சியின் ஆட்சிமன்றக் குழு தீர்மானித்தது. இது ஜூலைமாதம் மத்தியில் அமுலுக்கு வரும்.

## நல்லூர் திருவிழா

### இரவு 8 மணிக்கு முடியும்

குருநகர், திங்கள்

அடுத்தமாதம் 27- திகதி ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு திருவிழா ஒழுங்குகள் சம்பந்தமாக ஆராயும் பொருட்டு ஆலோசனைக் கூட்டமொன்று இன்றுகாலை யாழ்.மேயர் திரு. அல்பிறட் துரையப்பா தலைமையில் மேயரின் ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண பொலிஸ் அதிபரின் அலுவலகபெறுப்பாளர் மாணிக்கம், தலைமை அலுவலக பொறுப்பதிகாரி உப்பாலி, பஸ் பொலிஸ் பொறுப்பதிகாரிஇராசையா மாநகரசபை சுகாதார அத்தியட்சகர் எஸ். நடராசா. உதவி மேயர் ஆ. துரைராசசிங்கம் 12-ம் வட்டார உறுப்பினர் ஏ. நடராசா மாநகர மின்சாரப் பகுதி பொறியியலாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

ரேயல் பேணிஷேஸ்

திறப்புவிழா

நாளை (30 6 71) காலை 9 மணியளவில்

சாவகச்சேரி நகரசபைத் தலைவர்

எஸ். கனகரத்தினம் அவர்கள்

திருவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

மேற்படி வைபவத்தில் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

ரேயல் பேணிஷேஸ்

கண்டிறோட் — சாவகச்சேரி

ஏகவிநியோகஸ்தர்கள்:- மொடேர்ண் பேணிச்சர்

79/2, கஸ்தூரியார்வீதி, (போன்: 7364) யாழ்ப்பாணம்.

# 11-வது தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியது

## தமிழரசு திருத்தம் தோல்வி

தமிழரசுக் கட்சியினர் 11-வது அடிப்படைத் தீர்மானத்துக்கு சமர்ப்பித்த திருத்தப் பிரேரணை தோல்வியுற்றது.

சகல சட்டங்களும் சிங்களத்தில்ஆக்கப்படவேண்டும் என்றும் அவைகளுக்கான தமிழ் மொழி பெயர்ப்புக்கள் இருக்க வேண்டும் என்றும் 11 வது அடிப்படைத் தீர்மானம் கூறுகின்றது. இதனை மாற்றி சகல சட்டங்களும் சிங்களம் - தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ... என்று தமிழரசுக்கட்சியினர் தமது திருத்தப்பிரேரணையில் தெரிவித்திருந்தனர்

இந்தத் திருத்தத்தை 83 அங்கத்தவர்கள் எதிர்த்து வாக்களித்தார்கள். 13பேர் ஆதரித்து வாக்களித்தார்கள், ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர்.

சட்ட ஆக்கமொழி சம்பந்தமான 11வது தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியது.

85 பேர் ஆதரித்து வாக்களித்தனர். எதிர்த்து எவரும்வாக்களிக்கவில்லை. தமிழரசுக் கட்சியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

முன்பதாக அரசமைப்பு அலுவல்கள் அமைச்சர் இந்த தீர்மானத்தின்மீது பேசுகையில் தமிழரசுக் கட்சியினர் மட்டும்தான் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது என்றார். முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது அமைச்சராக இருந்த செனட்டர் திருச்செல்வம் சிங்களம் நாடுமுழுவதும் அரசகரும மொழியாக இருப்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று டாக்டர் கொல்வின்கூறினார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி

★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி

நடித்த

# பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா திரைகளில்

★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ

முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு

நடித்த

# நிறைகுடம்

## நாகம்ஸ்சினிமா

சுன்னாகம்
தினசரி
காலை 10-30 பி. ப 2-00 5-45
ஜெமினி - சாவித்திரி
நடித்த

**கற்புக்கரசி**

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த

**கண்ணன் என் காதலன்**

## றீகல் — யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30
பி .ப. 2-30
சிவாஜி-ஜமுனா-கண்ணாம்பா
நடித்த

**மருதநாட்டு வீரன்**

Daily at 6-00 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

## யாழ். வின்ஸர் வெண்திரையில்

காலை 10-30, 2-00, மாலை 5-30

★ ஜெமினிகணேசன் ★ விஜயகுமாரி
★ நாகேஷ், ★ ரமாபிரபா ★ ராஜ்ஸ்ரீ ★ அசோகன்

நடிக்கும்

மனைவி மக்களோடு பார்த்து மகிழவேண்டிய படம்

# மனைவி

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் பெருமையுடன் அளிக்கும்
மகோன்னத குடும்பச் சித்திரம்

## ராஜா (யாழ்ப்பாணம்)

(தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, மாலை 5-30

★

ஜெய்சங்கர்
(இரு வேடங்களில்)
நாகேஷ்
சுந்தரராஜன்
லக்ஷ்மி
விஜயகுமாரி
அஞ்சலிதேவி

★



# மகனே நீ வாழ்க

டைரக்ஷன்:
எம். கிருஷ்ணன் (ரிக்ஷாக்காரன் புகழ்)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடப்புத்தகம்:

சுன்னாகம், வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக வெளியீடான ஜாதிக நவோதய (ஏழாந்தரப்) புலமைப் பரிசில் (Scholarship) பரீட்சைக்கேற்றவிதமாக அமைக்கப்பெற்ற "கணிதப் பயிற்சி" ஒவ்வொரு வினாப் பத்திரமும் பகுதி I, II என இரு பகுதிகளைக் கொண்ட எட்டு மாதிரிகை வினாப்பத்திரங்களைக் கொண்டது விலை ரூபா 1-50. தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம் 3224

பாடப்புத்தகம்:

"புவியியல்"- வி. கந்தவனம் B. A.- ஆறும், ஏழாம், எட்டாந்தரங்களுக்குரிய தனித்தனி நூல்கள் ஒவ்வொன்றும் புதிய பாடத்திட்டத்துக்கும் வழிகாட்டிக்கும் அமைய எழுதப்பெற்றவை பாடப்பொருள் விளக்கத்துடன் தொடர்புபடுத்தப்பெற்ற தெளிவான, திருத்தமான விளக்கப்படங்கள் [50] தனி வண்ணத்திலும், பல வண்ணங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுக்குத் துணை நூல்களாக "புவியியல் பாட வேலைப் பயிற்சிகள்" VI, VII, VIII வெளியிடப்பெற்றுள்ளன. தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம் 3226

கார்:

A/8 C L தொடர் கார் விற்பனைக்குண்டு. கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரியில் பார்வையிடலாம். 3217

விதைநெல்

200 புசல் B9 11/11 விதை நெல் ஒட்டிசுட்டானில் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு P. இராஜரத்தினம் வேலைத்தல அதிகாரி (முன்னாள் நீர்ப்பாசன பகுதிப் பிரிவு) கந்தோர். அனுராதபுரம். 3229

### தேவை

கூட்டுறவு வைத்தியசாலைக்கு வேலையாட்கள் (பிரதானமாக மலசல கூட வேலை செய்யக்கூடியவரும் மற்றும் சாதாரண வேலைகள் செய்யக்கூடியவராயும் தேவை. சம்பளம்- 45-1.50-60 வைத்தியசாலை விதிப்படி பஞ்சப்படிகளும் வழங்கப்படும், விண்ணப்பங்கள் தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய், சுழிபுரம் என்னும் முகவரிக்கு 15-7-71க்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பவும். 3220

கேற், கிறில், கம்பாலை, வெல்டிங் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 1-7-71ல் நேரில்சமூகமளிக்கவும். லங்கா றேடிங் அயன் வேர்க்ஸ், 31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3223

### ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த

**பணமா பாசமா?** 2874

### விற்பனைக்கு

பாடபுத்தகம்

ஆறும் வகுப்புச் "சுகாதாரபோதினி" 6 ஆம் 7 ஆம் வகுப்புக்களுக்கென ஒரே நூலாக அமைக்கப்பெற்றிருந்த 'சுகாதாரபோதினி' இப்பொழுது கல்வி அமைச்சினால் 6-ம் வகுப்புக்கென அண்மையில் வெளியிடப்பட்ட சுகாதாரக் கல்விப் பாடத் திட்டத்திற்கேற்பத் திருத்தியமைக்கப் பெற்றுள்ளது (ஏழாம் வகுப்பு நூல் அச்சில்) விலை ரூபா 1-50 தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். 3225

### வகுப்புகள்

7-ம், 8-ம், 9-ம், 10-ம் தர வகுப்புகளுக்கு கலை, விஞ்ஞான, கணித பாடங்கள் புதிய பாடத்திட்டத்தின் படி ஜூலை 1-ம் திகதி தொடக்கம் நடைபெறும். விபரங்களுக்கு: 36, 3-ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3214

### தேவை

வெலோனா தொழிற்சாலையில் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை, முற்பணம் கட்டக்கூடியவர்களும் வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களும் நேரில் வந்து 1-ம் திகதிக்கு முன்னதாக எங்கள் கொம்பனியில் கலந்துகொள்ளவும். கொம்பனிச் சயிக்கில் வழங்கப்படும். சம்பளமும் நல்ல கொமிசனும் கொடுக்கப்படும். வெலோனா தொழிற்சாலை, உடுவில் தெற்கு, மல்லாகம், சுன்னாகம். 3228

### கேள்வி விளம்பரம்

1. 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி வரை முல்லைப்புலவு றோட்டு திருத்தவேலைக்கு காரைநகர் வடக்கு ஊர்மன்ற அக்கிராசனரால் அரக்கு முத்திரை வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டுக்காசு ரூபா 140/-ம் (நூற்றிநாற்பது) பத்திரக்கிரயம் ரூபா 10/-ம் கட்டியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் 9-7-71-ந்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

3. இதன் பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அதே திகதியிலும் நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. இது சம்பந்தமான விபரங்கள் யாவும் எமது ஊர் மன்ற அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உ. உ. ஆணையாளர் அலுவலகத்திலும், வேலை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

அ. மு. அம்பலவாணர்
தலைவர்,
ஊர்மன்றம்,
காரைநகர் வடக்கு.

## ராணி (யாழ்ப்பாணம்)

காலை 10-30 பி ப, 2-00 மாலை 5-30

ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த

# ஜீவநாடி

## மனோகரா (யாழ்ப்பாணம்)

தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30

முத்துராமன் — லக்ஷ்மி,
நாகேஷ் — ராகினி
நடித்த

3வது வாரம்

# நவக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தின் முன்னாள்

# உபஜனாதிபதி அலிசாப்ரிக்கும் 9 பேருக்கும் ஆயுள் தண்டனை

## மற்றும் பலருக்கு கடூழியச் சிறை

கெய்ரோ, ஜூன் 28

ஐக்கிய அரபுக் குடியரசின் முன்னாள் உபஜனாதிபதி அலிசாப்ரி உட்பட மேலும் ஒன்பது பேருக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி அன்வார் சதாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சதி செய்தார்கள் என்பதன் பேரில் பதவிநீக்கப்பட்டு விசாரணைசெய்யப்பட்டு வந்தனர். இவர்களது உடமைகள் சில நாட்களுக்கு முன்பாக அரசாங்கத்தால் பறிமுதல்செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவர்களோடு மேலும் பலருக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக கெய்ரோவில் இருந்து வெளிவரும் அல் அஹ்ராம் என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் உபஜனாதிபதி அலிசாப்ரி உட்பட போர் அமைச்சர் செய்தித் தொடர்பு அமைச்சர், ஐக்கியஅரபுக்குடியரசின் ஒரே கட்சியான அரசு சோஷலிச முன்னணியின் தலைவர் உட்பட ஏழு அமைச்சர்கள் பதவிநீக்கம்செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது வாசகர் அறிந்ததே.

இதேவேளையில் புதிதாக அமையவிருக்கும் அரபு சமஷ்டிக்கான புதிய அரசியல் திட்டமொன்றை அமைப்பதில் ஐக்கிய அரபு குடியரசு, சூடான், லிபியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஈடுபட்டுவருகின்றனர். நேற்று இவர்கள் இரண்டு மணி நேரம் இது பற்றிய ஆலோசனையில் ஈடுபட்டனர்.

......

### கமிஷன்நியமனம்

கோட்டை திங்கள்

ஏஜென்ஜி நிறுவனம், தரகர் நிறுவனம் ஆகியன பற்றி விசாரணை செய்வதற்காக விசாரணைக் கமிஷன் ஒன்றை மகாதேசாதிபதி நியமித்துள்ளார். 7 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள கமிஷன் நாட்டுக்கு எவ்வகையில் இவற்றினால் பாதிப்பு உண்டு என்பது பற்றியும், எடுக்கப்படவேண்டிய மாற்ற நடவடிக்கைபற்றியும் அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

## இந்தியாவைப் போல் அரபு நாடுகள் நடக்கவேண்டும்

டமாஸ்கஸ், ஜூன் 28

அரபு மக்களுக்கு இந்தியா என்றும் தனது ஆதரவைக் கொடுத்துவந்துள்ளது. பொருளாதாரம் மதம் சம்பந்தமான காரணங்களுக்கல்லாமல் அரபு மக்களின் போக்கு நீதியானதும் நேர்மையானதும் என்பதினாலேயே இந்தியா தனது ஆதரவை அரபு நாடுகளுக்கு அளித்துவந்திருக்கிறது. இதே போக்கை அரபு நாடுகளும் கிழக்கு வங்காளப் பிரச்சினையில் கடைப்பிடிக்க வேண்டுமென்றே இந்தியா விரும்புவதாக டமாஸ்கஸ்ஸில் இந்திய அமைச்சர் பக்ருதீன் அலி அகமத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு வங்காள அகதிகள் பிரச்சினை பற்றி அரபுநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் திரு. அகமத், சிரியாவின் அதிபரையும், சட்ட நிபுணர்கள் மற்றும் அரசியல் அறிஞர்களுடனும் இது பற்றி ஆலோசனை நடத்தினார் பிரதமர் இந்திரா காந்தியின் கடிதமொன்றை அவர் சிரியாவின் அதிபரிடம் கையளித்தார்.

திரு. பக்ருதீன் அலி அகமத் மேலும், இப்பொழுதுள்ள பிரச்சினை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள பிரச்சினையல்ல; பாகிஸ்தான் தலைவர்களுக்கும் அந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்துக்கும் இடையேயுள்ள பிரச்சினையாகும். இதை மனிதத் தன்மையுடன் அணுகி அகதிகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பிச் செல்லவும், அவர்கள் அங்கு பாதுகாப்புடன் இருக்கவும் வழி வகுக்கவேண்டுமென்று அரபு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஜஸ்தான்

### முதலமைச்சர் ராஜினாமா செய்வாராம்?

புதுடில்லி, ஜூன் 28

ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் மோகன்லால் சுகாடியா தனது பதவியிலிருந்து ராஜினாமாசெய்யப்போவதாக அறிவித்துள்ளார். இது தனது சொந்த விருப்பமென்றும், இப்பதவிக்கு வேறொருவர் நியமிக்கப்படுவதைத் தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. சுகாடியா கடந்த 17 ஆண்டுகளாக தொடர்ந்து ராஜஸ்தான் முதலமைச்சராக இருந்துவருகிறார். இதற்கிடையில் இவர் பதவியிலிருந்து விலகுவதைத் தடுக்குமாறு பிரதமர் இந்திராவிடம் கோருவதற்குச் சட்டசபை உறுப்பினர்கள் முயன்றுவருவதாகச் சொல்லப்படுகிறது. இவர் விரும்பும் பட்சத்தில் மந்திரிசபையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு வசதியாக 21 அமைச்சர்கள் தங்கள் ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

### மாணிக்கஜோதி

யாழ்ப்பாணம் செவ்வாய்

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நேற்று மாலை மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை நடைபெற்றது. கவியோகி சுத்தானந்த பாரதியின் மாணிக்க ஜோதி என்னும் பொருள் பற்றிய ஒலிப்பதிவு மிக்க வைற் ஸ்தாபன அதிபர் திரு க. கனகராசாவின் ஆதரவில் நடைபெற்றது.

......

### "அற்புதங்கள் நிறைந்தது இந்துமதம்"

உடுவில், வெள்ளி

"இந்துசமயம் எப்போது தோன்றியது என்று எவராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. இந்துமதம் தோன்றிய காலம் முதல் பல அற்புதங்கள் இறையருளால் நடைபெற்று வருகின்றன. திருஞானசம்பந்தர் முதலான பல இந்துமதகுரவர்களும் குருமார்களும் காலத்துக்குக் காலம் பற்பல அற்புத நிகழ்ச்சிகளை செய்துவருகின்றனர். இன்றும் கூட நம்மத்தியில் வாழும் பகவான் சத்திய சாயிபாபா ஆபிரிக்கா போன்ற பிறமத நாடுகளுக்கு விஜயம் செய்து சைவமதத்தின் மகிமையால் பல அற்புத செயல்களை செய்துவருவதை காணலாம். இத்தகைய பல அற்புதங்களை செய்யக்கூடிய வலிமையும் திறமையும் கொண்ட ஒரேசமயம் இந்து சமயமாகும்.

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயத்தின் சைவ மாணவர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசையில் உரையாற்றிய ஆசிரியர் திரு. ஏ. மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

......

### விளையாட்டு மைதானம் அமைத்துத்தருக

நெடுங்கேணி, திங்கள்

நெடுங்கேணிப் பகுதியில் பல விளையாட்டு வீரர்கள் இருந்தும், அவர்கள் தகுந்த பயிற்சி பெற்று முன்னேற்றம் அடைய ஏற்ற மைதான வசதியோ- ஏனைய உதவிகளோ இல்லாமை மிகவும் மனவருத்தமடைய வேண்டிய தொன்றாகும், எனவே நெடுங்கேணிப்பகுதிக்கு ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத்தர ஏற்பாடு செய்யுங்கள்.

இவ்வாறு வவுனியா மாவட்ட விளையாட்டுப் பகுதி பரிசோதகரிடம் நெடுங்கேணி கிமு ச செயலாளர் திரு. த.ம. பீற்றர் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில்

### மருந்து ஆய்வு கூடம்

கோட்டை, திங்கள்

கொழும்பு பெரியாஸ்பத்திரியில், மருந்துகளின் தகுதியை ஆராயும் புதிய ஆய்வு கூடத்தை சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாச திறந்துவைத்தார்.

ஜப்பான் உதவியுடன் நிறுவப்பட்ட இந்த ஆய்வுகூடம் 16லட்சம் ரூபாவுக்கு மேலாகச் செலவிடப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் மருந்துகளையும், இறக்குமதி செய்யப்படும் மருந்துகளையும், அரசாங்க ஆஸ்பத்திரிகள், மருத்துவச் சாலைகள் மற்றும் வைத்தியத்துறை நிறுவனங்களுக்கு கொடுப்பதற்கு முன்பாக, அம்மருந்துகளின் தகுதியை ஆராயும்.

இவ்வுதவியினால் இருநாடுகளுக்குமிடையேயுள்ள உறவு மேலும் பலப்படுமென ஜப்பான் பிரதிநிதி தமது பேச்சின்பொழுது நம்பிக்கை தெரிவித்தார்.

தற்பொழுது ஜப்பானில் இவ்வாராய்ச்சி சம்பந்தமாக பயிற்சிபெற்றுவரும் இரு இலங்கையர் இவ்வாய்வு கூடத்தில் கடமையாற்றுவர் இந்த ஆய்வுகூடத்தில் கடமையாற்றுவதற்கு மேலும் மூன்று நிபுணர்களை ஜப்பான் கொடுத்துதவும்.

......

### கமத்தொழில் பகுதி விநியோகம் செய்யவேண்டும்'

யாழ்ப்பாணம், செவ்.

" இவ்வாண்டு சின்னவெங்காயம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற விதை உபஉணவு உற்பத்திக்கு வேண்டியவற்றை அரசாங்க மூலம் எல்லாக் கூட்டுறவுக் கடைகளுக்கும், பயிர்ச்செய்கைக் குழுக்களுக்கும் கமத்தொழிற் பகுதி விநியோகம் செய்யவேண்டும்''

இவ்வாறு கரும்மகஜரை கரைச்சி தட்டுவன் கொட்டி கமக்காரர் சங்கம் வடபகுதி விவசாய விரிவாக்க இலாகாவுக்கும், கமத்தொழிற்பகுதியினருக்கும் அனுப்பியுள்ளது.

......

### மகாகவிக்கு அஞ்சலி

சுழிபுரம், திங்கள்

காலம் சென்ற கவிஞர் மகாகவிக்கு அஞ்சலி செலுத்தி ஒர் அனுதாபச் செய்தியை அன்னாரது குடும்பத்துக்கு வழக்கம்பரை தமிழ் மன்றம் அனுப்பிவைத்துள்ளது. 'காலம் சென்ற கவிஞருக்கு நாம் செய்யும் கடமை அவரது நூல்களை ஆதரித்து மேலும் பல பதிப்புகளை வெளியாச் செய்வதே'' என இலக்கிய அன்பர்களுக்கு ஓர் வேண்டுதலை மன்றத்தினர் விடுத்துள்ளனர்.

### பிரிவுபசாரம்

வவுனியா திங்கள்

வவுனியா கச்சேரியில் உதவி அலுவலக அதிகாரியாக கடந்த ஐந்து வருடங்கள் கடமையாற்றிய எம். சிவசிதம்பரம் திருகோணமலைக்குத் தலைமைப் பீடக் காரியதரிசியாக மாற்றலாகிச் செல்வதையிட்டு அவருக்குப் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.





உங்கள் உடம்பின் உள்
சுத்தத்திற்கு பாதுகாப்பான
உட்கொள்ள இலகுவான சுகபேதி
**வண்டலெக்ஸ்**

★ நவீன விஞ்ஞான சேர் முறைப் படி தயாரிக்கப்படுவது.
★ அதி நம்பிக்கையானது.
★ பாதுகாப்பானது.
★ வாய்க்கிதமானது. உட்கொள்ள இலகுவானது.
★ வழக்கமான உணவு உட்கொள்ளலாம்.
★ சிறுவருக்கும் வளர்ந்தவர்களுக்கும் உகந்தது.

உங்களுக்கும் உகந்த உன்னத சுகபேதி வண்டலெக்ஸ்.




GRANT 36 52B 71

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்விமுறையில் மாற்றம் வேண்டும்"

## மகாஜனக்கல்லூரி அதிபர் அறிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

எமது கல்விமுறை இப்பொழுது வெறும் ஏட்டுப் படிப்பாகவே இருந்து வருகிறது. உத்தியோகங்களை நாடியே எமது மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இன்று எமது சமுதாயம் தொழில் நுட்ப சமுதாயமாக மாறி வருகிறது அதற்கேற்ப கல்வி முறை மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி அதிபரின் வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது! எமது பல்கலைக் கழகங்கள் தேவைக்கு மேற்பட்ட கலைப்பட்டதாரிகளை உருவாக்கி வருகின்றன. இப்பட்டதாரிகள் வேலையற்று இருக்கின்றார்கள் அதே நேரத்தில் விஞ்ஞான தொழில்நுட்பப் பட்டதாரிகள் தொகை போதாமலிருக்கிறது. தொழில் துறையின் தேவைக்கு ஏற்பவே எமது கல்விமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகக்கல்வி அமைப்பில் சமநிலை ஏற்படுதல் அவசியம். வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் வகையில் புதிய கைத்தொழில்கள் பல தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

எமது சமுதாயம் தொன்று தொட்டுக் கமத் தொழிற் சமுதாயமாகவே இருந்து வருகிறது. பழைய கமத் தொழில் முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளைப் பின்பற்றி விஞ்ஞான அடிப்படையில் முன்னேற வேண்டிய காலம் வந்து விட்டது.

அரசினர் வகுத்துக் கொடுக்கின்ற கல்விக் கொள்கையை வெற்றி பெறச் செய்வதில் ஆசிரியர்களுக்குப்பெரும் பங்குண்டு. குழந்தை வளருகிறது. பள்ளிக்கு வருகிறது. படித்து வெளியேறுகிறது. வெளியேறியபின் சமுதாயத்தில் நற்பிரசையாக வாழ வேண்டும். எனவே பாடசாலைகளில் குடியுரிமைக் கல்வி சகல மாணவர்களுக்கும் கட்டாய பாடமாக அமைய வேண்டும். எமது கடமைகள் எவை? உரிமைகள் எவை? குடும்பம், பாடசாலை, சமுதாயம், அரசாங்கம் எமக்கு என்ன நன்மைகளைச் செய்கின்றன? என்பவை பற்றிச் சிந்தித்து மாணவர் தெளிவு பெறும் வகையில் குடியுரிமைக் கல்வி அமைத்தல் மிகவும் அவசியமானது.

# "மக்கள் ஆதரவின்றி எதுவும் வெற்றிபெறாது"

## வள்ளம் கட்டும் துறை திறப்புவிழாவில் பேச்சு

காலி திங்கள்

வள்ளங்கள் தயாரிப்பதற்கென வள்ளம்கட்டும் துறையொன்று காலியில் கெக்கல என்ற இடத்தில் சம்பிரதாயப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. திட்டமிடல் தொழில் வாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் எச். ஏ. டி. எஸ். குணசேகர இதனை ஆரம்பித்து வைத்தார்.

அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது திட்டம் இதுவாகும். கத்தலுவ அபிவிருத்திச் சபையினால் இந்த வள்ளம் கட்டும் துறை நிர்வகிக்கப்படும். இந்த நிகழ்ச்சியை பொட்டி ஹமராதுவ எம். பி. திரு பிரின்ஸ் குணசேகர தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

நிரந்தரச் செயலாளர் டாக்டர் குணசேகர பேசுகையில் கத்தலுவ அபிவிருத்திசபை முதலாவதாக இயங்க ஆரம்பித்ததின் மூலம் சரித்திரத்தில் இடம் பெறும் என்றார்.

கடந்த காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களின் பேரால் ஏராளமான பணம் செலவாகியுள்ளது. மக்கள் ஆதரவு இல்லாமையால் இவை தோல்வியடைந்தன. மக்கள் ஆதரவு இல்லையென்றால் எந்த அபிவிருத்தித் திட்டமும் வெற்றிபெற மாட்டாது என்று அவர் மேலும் சொன்னார்.

# மாஸ்கோ செல்லும் வடபகுதி பிரதிநிதி

தாவடி, திங்கள்

மாஸ்கோவில் நடைபெறவுள்ள உலக க்ஷயரோக தடை ஸ்தாபனத்தின் 21-வது வருடாந்த மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாக இலங்கை தேசிய க்ஷயரோக நிவாரண சங்கத்தின் வடமாகாண பிரசார உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் அழைக்கப்பட்டுள்ளார்.

ஜூலை மாதம் 12-ம் திகதி முதல் 16-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இம் மாநாட்டில் திரு. தேவகடாட்சம் "க்ஷயரோகத்தை ஒழிப்பதில் சமுதாயத்தின் பங்கு" என்ற விடயம்பற்றிய சொற்பொழிவை நிகழ்த்துவார்.

முதன்முறையாக இலங்கையில் வடமாகாணத்தில் இருந்து உலக மாநாட்டிற்கு ஒரு பிரதிநிதியாகக் கலந்து கொள்ளச் செல்வது இதுவே முதல் தடவையாகும்.

### மின்சாரம் கிடைக்கிறது

மாவிட்டபுரம், திங்கள்

மயிலிட்டி கிராமசபையின் உள்ளமூன்றுவீதிகள் அடுத்த மாதம் 2-ம் திகதி முதல் ஒளி பெறவிருக்கின்றன.

பலாலி-வடக்கு ஒட்டகப்புலம், தம்பாளை ஆகிய வீதிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படவிருக்கிறது.

இதேபோல மற்றும் பல பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகம் விஸ்தரிக்கப்படவிருப்பதாக மயிலிட்டி கிராமசபைத்தலைவர் திரு. கே. இராஜதுரை தெரிவித்தார்.

இம் மின் இணைப்புக்கு சுமார் 96 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

### யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாரதி லைசென்ஸ் ஒன்று யாழ்ப்பாணம் மெயின் வீதியில் கண்டெடுக்கப்பட்டு திரு. க. குணரத்தினம் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

# அமைச்சருக்குக் மேயர் கடிதம்

குருநகர். திங்கள்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதியாகி வரும் கல்கி, குமுதம், பொம்மை போன்ற பத்திரிகைகள் கொழும்புப் பகுதியில் ஒரு விலையும் யாழ்ப்பாணப் பகுதியில் வேறொரு விலையுமாக இடத்திற்கு இடம் வித்தியாசமாக விற்கப்பட்டு வருகிறதாம்.

இப்பத்திரிகைகள் இலங்கையின் எப்பாகத்திலும் ஒரேவிலையில் விற்கக் கூடியதாக போக்குவரத்து செலவுகளை உள்ளடக்கியே இப்பத்திரிகைகளை வெளியிடும் ஸ்தாபனங்கள் இலங்கைக்கு இவற்றை அனுப்பி வருகின்ற போதிலும் சில வியாபாரிகள் இடத்திற்கிடம் வேறுவிதமான விலையிற் கூட்டி விற்பனை செய்து வாசகர்களை கஷ்டப்படுத்தி வருவதாக பல வாசகர்கள் யாழ் மேயர் அல்பிறட் துரையப்பாவிடம் முறையிட்டுள்ளனர்

இதுசம்பந்தமாக திரு. துரையப்பா உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

......

### பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இல்லப்பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு

கீழ்ப்பிரிவு! ஆண்கள் 1-ம் இடம்: க. சடகோபன், 2 ம் இடம்: ச. தயானந்தன் 3-ம் இடம்: ப. சக்திவேல். கீழ்ப் பிரிவு: பெண்கள் 1-ம்இடம் த சிவாஜினி. 2-ம் இடம்: சி இராஜலக்ஷ்மி 3-ம் இடம் பொ. இரஞ்சிதமலர்

மத்தியபிரிவு! ஆண்கள் 1-ம் இடம்: க. மோகன், 2-ம் இடம் மு. ஞானகுரு, 3-ம்இடம் சொர்ணகிரிதாஸ் மத்திய பிரிவு பெண்கள் 1-ம் இடம் தே. சர்வகலாதேவி 2-ம் இடம் வே. புஷ்பராணி. 3-ம் இடம்; நா. நிமலசூப்பிகை.

மேற்பிரிவு ஆண்கள் 1-ம் இடம்: சி. சிவசுப்பிரமணியம், 2-ம் இடம். ந. சுப்பிரமணியம், செ. சிவராஜா 3-ம் இடம்: வ. செல்வரத்தினம்.

மேற்பிரிவு பெண்கள் 1-ம் இடம்: சி. இராஜேஸ்வரி 2-ம் இடம்: நா. கனகாம்பிகை 3-ம் இடம்: வ இராஜேஸ்வரி இப்போட்டியில் வேலுப்பிள்ளை இல்லம் 1 ம் இடத்தையும், விநாயகர் இல்லம் 2-ம் இடத்தையும், நாவலர் இல்லம் 3-ம் இடத்தையும் பெற்றுள்ளன.

......

வளர்மதிக்கு

### போட்டியில் பங்குபற்ற தடை!

யாழ்ப்பாணம், செவ்

சுண்டிக்குழி இளஞ்சிக்க சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'மென்பந்துச் சுற்றுப் போட்டியில்' 'சி' பிரிவில், கடந்த வாரம் ஈச்சமோட்டை வளர்மதி கழகத்துக்கும், கென்னடி கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் வளர்மதி வெற்றி பெற்றிருந்தது.

இந்த வெற்றியை ஆட்சேபித்து கென்னடி கழகத்தினர், விளையாட்டு அமைப்பாளர்களிடம் தெரிவித்த ஆட்சேபனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனால் வளர்மதிக் கழகம் போட்டியின் விதிமுறைகளை கடைப்பிடிக்கத் தவறியதற்[illegible] போட்டியிலிருந்து விலக்கப்பட்டது. (தேநி)

# பழந்தமிழ் நூல்களைப் பாதுகாக்க ஒரு நிலையம்!

யாழ்ப்பாணம், செவ்

"நாடெங்குமுள்ள பொதுத்தாபனங்கள், நூல் நிலையங்கள் தனிப்பட்டோர் பழந்தமிழ் நூல்களோ சச்சிகைகளோ பழுதடைந்து அழியும் நிலையை அடையுமானால் அவற்றை முற்றிலாய் அழியவிடாது நிரந்தர செல்வமாகப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனக்கோரும் தீர்மானம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற அறிஞர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் ஆலோசனையின்படி நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்திலே பழந்தமிழ் நூல்களைப் பாதுகாக்கும் நிலையமொன்றை விரைவில் ஆரம்பிக்கவிருப்பதாக ஆதீனக் கௌரவ சித்தாந்த விரிவுரையாளர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை பேசும்பொழுது கூறினார்

ஓய்வுபெற்ற கல்லூரி அதிபரும் சைவசித்தாந்த நூலாசிரியருமாகிய திரு. பொ. இரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# விவசாயக்கடன்முடிவு திகதி ஜூலை 5

அராலி ஞாயிறு

எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்கு வங்கிக் கடன் பெறவிரும்பும் விவசாயிகள் தங்கள் கடன்மனுக்களை வருகிற மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் தத்தம் கிராமங்களிலுள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனுக்கள் ப. நோ. கூ. சங்கங்களில் ஆராயப்பட்டு 8-ம் திகதிக்கு முன்னர் வங்கிகளில் சேர்க்கப்படவேண்டுமென்றும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுற்று நிருப மூலம் அறிவித்துள்ளார்.

காலந்தாழ்த்தி செய்யப்படும் மனுக்களுக்கு கடப்பணம் கிடைக்கவில்லையென்ற முறைப்பாடுகள் கவனிக்கப்படாதென்றும் அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

### பண்ணிசைக் கச்சேரி

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் பூகராசி அம்மன் கோவில் மகாகும்பாபிஷேக 29ம் நாளான இன்றுமாலை ஆறுமணியளவில் பண்ணிசைச் செல்வன் க. சிவபாலன் கோஷ்டியினரின் திருமுறை பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

......

### கார் விபத்தில் இளைஞன்

மாவிட்டபுரம், திங்கள்

பஸ்சிலிருந்து இறங்கியவரை கார் மோதித் தள்ளியது. விபத்தில் சிக்கிய 27 வயது இளைஞர் யாழ் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாவிட்டபுரம் மதவடிக்கு சமீபத்தில் நடந்த இவ்விபத்தில் சிக்கியவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ் சுப்பிரமணியம் என்ற இளைஞராவர். சம்பந்தப்பட்ட காரும் சாரதியும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

......

### குருபூசை

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு வி. இராசசுந்தரம் தலைமையில் மாணிக்கவாசகர் குருபூசை வித்தியாலய மண்டபத்தில்நடைபெற்றது. தேவாரபாராயணம் சொற்பொழிவு. ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### பத்தேகம நாற்கொலை

## பொய்ச்சாட்சி சொன்னவருக்கு 5 வருட சிறை

காலி, திங்கள்

பத்தேகம நாற்கொலை வழக்கில் சாட்சியான பத்தேகமவைச் சேர்ந்த பி. பிராம்பி என்பவருக்கு 5 வருடக் கடுமிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது காலி அசைஸ் நீதியரசர் டி. டபிள்யூ. எம். சிறிமானே இத்தண்டனையை வழங்கினார்.

சாட்சி பொய்ச்சாட்சி சொன்னவிதத்தில் ஜூரி சபையினர் ஏகமனதாகக் குற்றவாளியெனத் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து நீதியரசர் அவருக்கு 5 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.


* உறுதியானதும்

* நீடித்து உழைப்பதும்

* தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை - மர ஸ்குரு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால் ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனக தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 33143 - 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாளை நடைபெறும் கும்பாபிஷேகங்கள்

## நாயன்மார்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள்

- க. சொக்கலிங்கம் -

(தலைவர் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திச்சபை)

இந்துப் பேராழியின் நடுவிலே நித்திலம் எனப் புகழொளி கான்று விளங்குவது இலங்கை மணித்திருநாடு இதன்வடபால் அமைந்த யாழ்ப்பாணம், முற்காலத்திலே தமிழரசரால் ஆளப்பெற்றது. அக்காலத்தில் யாழ்ப்பாண அரசின் தலைநகராய் நல்லூர் விளங்கியது. அதன் அண்மையிலே விளங்கிய நாயன்மார்கட்டு பல நூற்றாண்டுகளாய்ச் சைவநன்னெறியையும், ஆயுர்வேத வைத்தியத்தையும் பேணிக்காத்து வந்தமை குறிப்பிடத்தக்கது 'கடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலினராகிய' நாயன்மார் அறுபத்து மூவர்க்கும் குருபூசை நடாத்திவந்த திருமடம் ஒன்று, அண்மைக் காலம் வரை இங்கு நிலவி வந்தது.

நாயன்மார்கட்டு, தமிழரசர் காலத்திலேயே சிறப்புடன் விளங்கிய ஒரு கிராமமாகும். நல்லூரின் அண்மையில் உள்ள இங்கு சைவநெறிபேணி வாழ்ந்த மக்கள், நாயன்மார்களின் குருபூசைக்கென ஒரு மடத்தினை முன்பு அமைத்திருந்தனர். இதற்குத் தமிழரசரின் மானியமும் இருந்தது. நாயன்மாருக்குக் குருபூசை நிகழ்த்தி அவர்களைத் தம் அன்பினாலே மக்கள் கட்டி வைத்த இடமாதலால் இதற்கு நாயன்மார்கட்டு எனப் பெயர் வந்தது போலும்!

இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர், அச்சுவேலியிலிருந்து இங்குவந்து குடியேறிய முருகர் என்ற அம்பாள் அடியார், மரக்கட்டையால் அமைந்த அம்பாள் திருமுகத்தினை வேப்பமர நிழலிலே மண்மேடையொன்றில் வைத்து வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றி வழிபட்டு வந்தார். அவர் தமது இஷ்டதெய்வத்திற்கு இட்டுவழங்கிய திருநாமம் பேய்ச்சி என்பதாகும். செம்மணிச் சுடுகாட்டின் அண்மையிலே, பேயனோடும் பேய்ச்சிக்கு அப்பெயர் பொருந்துவதே.

1928 இல் சாஸ்திரோக்தமாகக் கோயிலைக் கட்டிய பொழுதுதான் பேய்ச்சியம்மை, நவசக்திகளுள் ஒருத்தியும், ஞானரூபிணியுமாகிய இராஜராஜேசுவரி என்ற திருநாமத்தினைப் பெற்றாள். எனினும் இன்றும் பேய்ச்சியம்மன் என்ற பெயரே பிரசித்தம். முருகர் வழிபட்ட மரக்கட்டையாலான திருவுருவம் இன்றும் சிதையாது விளங்குதல் பெரும் அற்புதமேயாகும்.

பொருளாதார வளங்குன்றிய கிராமமாக நாயன்மார்கட்டு விளங்குவதால், அம்மையின் கோயில் பலகாலமாகச் சிதைந்தநிலையில் இருந்தது. அதனை தீர்ணோத்தாரணஞ் செய்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் நாளை புதன்கிழமை நிகழ்வது சர்வலோகமாதாவாகிய ஸ்ரீ இராஜராஜேசுவரியின் திருவருளேயாம்.

கோயிலின் சூழலிலே சில ஆண்டுகளாகச் சைவப்பணியாற்றிவரும் நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகம் இக் கும்பாபிஷேகத்தினையொட்டி ஒரு சிறப்புமலரை வெளியிடுகின்றது கோயில் மேற்குவீதியிலே (உள்வீதி) 29, 30-ந் திகதிகளிலே திருமுறை மகாநாடொன்றையும் அது நடத்துகின்றது. இம்மகாநாட்டிலே பல சைவப்பெரியார்கள் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றுகின்றனர்.

...

### திருநீலகண்டப் பிள்ளையார் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ் மீசாலை தட்டான்குளம் திருநீலகண்டப்பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை நடைபெறுகிறது. பிரதமகுரு நயினை என். எஸ். பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

இவ்வாலயத்திற்கு சுற்று மதில், மணிக்கூட்டுக் கோபுரம் போன்றவற்றைக் கட்டி திருப்பணியை 80 வயதான மீசாலை வடக்கு திரு. கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் பூர்த்தியாக்கியுள்ளார்.

வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்கின்றனர்.

இக்கோயில் பஞ்சாயசபை உறுப்பினர்கள் விவரம் வருமாறு: திருவாளர்கள்: பேரம்பலம் வாரித்தம்பி, இராசையா, க. வைத்திலிங்கம். மூ. சின்னத்தம்பி, கா. சின்னத்துரை. பொதுச் சபைத்தலைவர் திரு. க. மயில்வாகனம், செயலாளர் எஸ். சுவாமிநாதன். (குவிம)

...

### ஆனி உத்தர திருவிழா

யாழ்ப்பாணம், செவ் நீர்வேலி கந்தசாமிகோவிலில் இன்று ஆனி உத்தர திருவிழா நடைபெறுகிறது. காலை 6 மணியளவில் நடராஜப்பெருமான் மஞ்சத்தில் வீதிவலம் வருவார் மறுநாள் அதிகாலை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

0 0 0

யாழ்ப்பாணம், செவ் மட்டுவில் சந்திரபுரம் கலுவத்துச் சிவன்கோவில் ஆனி உத்திரதரிசனம் நாளை புதன் கிழமை விசேஷ அபிஷேக ஆராதனையுடன் நடைபெறுகின்றது.

## தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலில் ஆனி உத்தரம்

-- கு. வி. ம. --

விநாயகப்பெருமான் தில்லையம்பலப் பிள்ளையார் என்னும் திருநாமத்துடன் கரவெட்டி கிழக்கில் நெல்லியடி என்னும் கிராமத்துக்கு அண்மையில் பரந்த வெளியில் கோகுலவாசம் செய்கின்றார்.

புதுமை மிகு இப்பிள்ளையார் இவ்விடத்தில் எழுந்தருளியிருந்து பல அற்புதங்களைச் செய்துள்ளார். இப்பரந்த வெளியில் மாட்டுக்காரப்பிள்ளைகள் மாடுகள் மேய்ப்பார்கள் என்றும், இந்தக் கால்நடைகளுக்கு நோய் நொடி ஒன்றும் வராமல் இந்த தில்லையம்பலப் பிள்ளையார் பாதுகாத்து வருகிறார் என்றும் நம்பப்படுகிறது.

மிகப்பழைய காலத்தில் இவ்விடத்திலுள்ள பூவரச மரத்தினடியில் மாட்டுக் காரப்பிள்ளைகள் சிற்றிலமைத்துவிளையாடி விட்டுச் சென்றார்கள் என்றும், அவர்கள் சமைத்த சிற்றில்கள் வேறுமிருகங்கள் தீண்டப்படாது அப்படியே பாதுகாப்பாய் இருந்தன என்றும்; இன்னொருமுறை ஒரு வெள்ளைக்காரத் தோட்டத்துரையின் உயர்ந்த இனப் பசு ஒன்று இங்குள்ள மல்லைக் குகையினுள்ளே சென்று விட்டது அது திரும்பிவரத் தெரியாமலிருந்தது. எத்தனையோ முயற்சிகள் செய்தும் பசுவை வெளியில் கொண்டு வரமுடியவில்லை. இறுதியில் அவ்வூர் மக்களின் ஆலோசனைப்படி வெள்ளைக்காரனும் தில்லையம்பலப் பிள்ளையாருக்கு விசேஷ பூசைகள் ஆராதனைசெய்யப்பட்டன. உடனே பசு எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் வெளியில்வந்தது. என்றும் இவ்விநாயகரின் அற்புதங்களைக் குறித்து பல கர்ண பரம்பரைக் கதைகள் கூறப்படுகின்றன.

இறைவன்திருப்பப்படியே தில்லையம்பலப் பிள்ளையார் என்ற இத்திருநாமத்தை மக்கள் சூட்டி இன்றும் வழிபட்டுவருகின்றனர். இவ் விநாயகருக்கு இவ்வூர் மக்கள் இந்த ஆண்டும் ஆனி உத்தர விழாவைச் சிறப்பாகச் செய்யவுள்ளனர். இவ்விழா நாளை நடைபெறும்.

## புளியங்கூடல் இந்தன்முத்து விநாயகர்

— பி. சந்திரசேகரம்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த புளியங்கூடலில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் இந்தன் முத்துவிநாயகருக்கு புனராவர்த்தனபிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை நடைபெறுகின்றது.

இற்றைக்கு இருநூற்றைம்பது வருடங்கட்கு முன்பிருந்தே இக் கோவில் திரு. நாகுப்டியர் மகன் முருகரால் ஆரம்பிக்கப்பட்டு அவர்தம் மக்களான திரு. கந்தர், திரு அம்பலவாணர், திருமதி வைரமுத்து மூவராலும் பின்னர் கட்டப்பட்டது. முருகர் தமது 400 பரப்பு நிலங்களைத் தமது பிள்ளைகட்குப் பகிர்ந்தளிக்கும்போது தமது மூத்த புதல்வராக மேற்படி கோவிலில் எழுந்தருளிய இந்தன் முத்துவிநாயகருக்கு நூறு பரப்பு நெற்காணிகளை முதிசமாக உறுதி எழுதிக் கையளித்தார். இன்றும் அக்காணியை வருதியங்கொண்டு புளியங்கூடல் இந்தன் முத்த விநாயகரது நித்திய பூஜைக்கிரமம் வழுவற நடந்து வருகிறது.

300 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த முருகர் என்ற பெரியார் வேலணை மேற்கைச் சேர்ந்த இராஜசேகர முதலியார் மகளை விவாகஞ் செய்திருந்தார்.

இந்தன் முத்துவிநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானம்

(6-ம் பக்கம் பார்க்க)

## தீர்த்தமகிமை பெற்ற மண்டுவில் அம்பாள்

— ஆர். ரி. சுப்பிரமணியம் —

இப்போது நடப்பது ஆறுமுக நாவலர் நூற்றாண்டு. எங்கும் கோயில்கள் புனருத்தாரணஞ் செய்யப்படுவதும் தேர்த் திருப்பணிவேலைகள் பூர்த்தியடைவதுமாகவே விளங்குகின்றது. சமய மறுமலர்ச்சியும் ஊக்கமும் மகிழ்ச்சி யூட்டும் வகையில் பிரவாகிக்கின்றது. தேவிவழிபாடு மிகவும் புராதனமானது தாயுள்ளம் எவரையும் இரட்சிக்கும் தன்மையது. ஆகவே தென்மராட்சி வாசிகளின் கூட்டு முயற்சியினால் சாவகச்சேரி வடக்கில் எழுந்தருளி பல நூற்றாண்டுகளாகக் கீர்த்தியுடன் மிளிரும் மண்டுவில் அம்மன் கோயிலைப் புனருத்தாரணஞ் செய்யும் வேலை கடந்த நாலுவருடங்களாக நடைபெற்று வந்தது நாளை 30ம் திகதி கும்பாபிஷேக வைபவம் நிகழுகின்றது

இக் கோயிற் தீர்த்தம் மிகவும் பிரசித்தி பெற்றது தீர்த்தக்கிணறுவற்றா ஊற்றை உடையது. கோயிலைச்சுற்றியுள்ள அதியற்புதச் சோலையைப் போல நடுக்காட்டிலும் காண்பதரிது திருக்குளமும் உண்டு. ஆனால் அடியார்கள் திருக்கிணற்று நீரையே பக்தியுடன் உபயோகிப்பர். அள்ளியள்ளித் தீர்த்தமாடுவர்

தீராநோயைத் தீர்த்தருளும் தேவிக்குரிய ஆலயத்தையும் இராமண்டபங்களையும் விதிப்படி பூர்த்தி செய்து அடியார்கள் திரண்டு வழிபடும் தினம் நாளையாகும்.

இவ்வாலயத்தில் பிரதி வருடமும் பெரும் பொருட் செலவில் பத்துநாட்கள் திருவிழா நடப்பது வழக்கம். வாணவிளையாட்டிற்கு இவ்வாலயம் பிரசித்திபெற்றது. திரு. இராசரத்தினம்பிள்ளை போன்றவர்களின் நாதசுரவாத்தியம் சோலை வனம் முழுவதும் கானமயமாக்கியதலம். கடந்த சிலவருடங்களாக கோயிற்திருப்பணியை முன்னிட்டு வாணவேடிக்கை முதலிய விழாக்களைப்பின் போட்டு ஒத்திவைத்துவிட்டு நிலைபெறுவ திருப்பணிகளைப் பூர்த்தி செய்த தென்மராட்சி வாசிகளின் முன்மாதிரியை இதர ஆலய நிர்வாகிகளும் பின்பற்றி நாவலர் காட்டிய நெறியில் நமது கோயில்களைப் பரிபாலிப்பது மிகவும் நன்மையாகும்.

## திருமண அழைப்பு

ஜோதி — கோதை

நிகழும் விரோதகிருது ஆண்டு ஆனி மாதம் 16-ம் திகதி (30-6-71) புதன்கிழமை காலை 7 மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் கோப்பாய் (இருபாலை) ச. சிவசாமிஐயரின் ஜேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி ஜோதீந்திர சர்மாவுக்கும் உடுவில் ஸ்ரீ சிவகடாட்சக் குருக்களின் புதல்வி சௌபாக்கியவதி ஞானப்பூங்கோதைக்கும் திருமணம் நடைபெறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3230

## நொத்தாரிஸ்மார் சட்டம்

107-ம் அத்தியாயம் 7—ம் பிரிவின்படியான

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி தெற்கு தாளையடி ஒழுங்கை, சபாரத்தினம் தங்கமாமயிலோன் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க என்னை நியமிக்கும்படி இத்திகதிதொடக்கம் ஒருமாதத்தின் பின் கொழும்பு பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யவிருக்கின்றேன் என்பதனை இதனால் அறியத்தருகிறேன்.

ச. தங்கமாமயிலோன்,
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்,
28-6-1971 2873

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம், பொதுசன நூல் நிலையத்திலுள்ள தேக்கு 1, முதிரை 1, மரங்களால் செய்யப்பட்ட நீளமான எண்ணற் பீடங்கள் Counters) இரண்டு எதிர் வரும்10 7-71ம்திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்குப கிரங்க ஏலத்தில் விடப்படுமென்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சம்பந்தப்பட்ட எண்ணற் பீடங்களைப் பார்வையிடவும், வேண்டிய ஏனைய தகவல்களைப் பெறவும் விரும்புவோர் பொதுசன நூல்நிலையத்துடன் தொடர்புகொள்ளலாம்.

ஏ ரி சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
பொதுசன நூல்நிலையம்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்
28-6-71. 2875

"யங் ஹாட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
விரைவில் ஆரம்பம்
'ரொம்பொலகேம்ஸ்'
தினசரி வேளைகள்
பி. ப 4-30 முதல்
இரவு 8-30 வரை
புதிய அங்கத்தவர்கள்
சேர்க்கப்படுவர்
பல்மேறு
கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

YOUNG HEARTS
SPORTS CLUB
Commencing shortly
Daily sessions
of
TOMBOLA GAMES
from
4-30 P.M — 8-30 P.M.
MEMBERSHIP
Open
for New Members
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் நாளையும்

# நாயன்மார்கட்டில் திருமுறை மாநாடு

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் நாயன் மார்கட்டில் இன்று திருமுறை மகாநாடு ஆரம்பமாகிறது. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் எடுக்கும் இம் மகாநாடு நாளை புதன்கிழமை வரை நடைபெறும். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலுக்கண்மையில் அமைக்கப்பட்டுள்ள திருமுறை அரங்கில் நடைபெறும் இம்மகாநாட்டில் பல அறிஞர்கள் திருமுறைகள் பற்றி உரையாற்றுவர்.

இன்று செவ்வாய்க்கிழமை பரமேஸ்வராக் கல்லூரிப் பதிலதிபர் திரு. சு. பரநிருபசிங்கம் தலைமையில் முதலாவது முறை அரங்கு நடைபெறும்.

இதன் போது 5-30 - 5-55 வரை முதல் மூன்று திருமுறைகள் பற்றி மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் மூ. சந்தையாவும் 5 55 - 6-20 வரை நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகள் பற்றி கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வித்துவான் பண்டிதர் சி. குமாரசாமியும், 6-20 - 6-45 வரை ஏழாந் திருமுறை பற்றி வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. சி. கார்த்திகேசுவும் 6-45, 7-10 வரை எட்டாந்திருமுறை பற்றி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர் வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இதையடுத்து மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழாவும் திருமுறைப்பண்ணிசையும் நடைபெறும்.

## அனைவர் பதவிகளும் தற்காலிகமாம்

யாழ்ப்பாணம், செவ்

"மானிப்பாய் கோவிற்பற்றுப் பகுதிக்கு நிறுவப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தில் தற்போது வேலை செய்துவரும் அனைவரும் தற்காலிகமானவர்களே. இவர்களுக்குப் பதிலாக நிரந்தர அடிப்படையில் புதிய நியமனங்கள் விரைவில் இடம்பெறவுள்ளன' என்று அதன் நிர்வாகசபை தெரிவித்திருப்பதாக நிர்வாகசபை அங்கத்தவரான திரு ஆர். லோகநாதன் தெரிவித்தார்

பிரஸ்தாப சமாஜத்தில் புதிதாக நிரந்தர அடிப்படையில் வேலைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்தி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதெனகடந்த 12-ம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேசமயத்தில் நிர்வாகசபை அங்கத்தவர்களில் பெரும்பான்மையோர் ஒரே இடத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என மானிப்பாய் கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக "ஈழநாடு" 25-ந் திகதி பதிப்பில் வெளியான செய்தியில் உண்மையில்லையென்றும் நிர்வாகசபையைச் சேர்ந்த அவர் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் கிராமத்தின் சார்பில் திரு. எஸ் தர்மசீலன் என்பவரும், மானிப்பாயின் சார்பில் திரு ஆர். லோகநாதன் என்பவரும் நவாலிக் கிராமத்தின் சார்பில் திரு. ஆர். ராஜரத்தினம் என்பவரும் நிர்வாகசபையில் அங்கத்துவம் வகிக்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவில் குறிப்பிட்ட கிராமங்கள் புறக்கணிக்கப்படவில்லை என்று நிர்வாகசபையைச் சேர்ந்த திரு ஆர். லோகநாதன் கூறினார்.

## பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

இன்று யாழ் சிங்களமகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெறமாட்டாதெனத் தெரியவந்துள்ளது. காலவரையின்றி இக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளதுடன் நடைபெறும் திகதி பின்னர் தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## நடவடிக்கை

குருநகர், செவ்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள தொழிலாளர்களின் குறைகளை நிவர்த்திக்கும் முகமாக யாழ் ஆஸ்பத்திரி அமைப்புக் குழு உபதலைவர் எஸ். ஜே. அன்ரனி எம் எம். சி. யாழ் ஆஸ்பத்திரியில் சேவைசெய்யும் தொழிலாளர்களது சங்கத் தலைவர்களையும் தொழிலாளர்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார். இக்கலந்துரையாடலின் பின்னர் தொழிலாளர்கள் கஷடங்கள் பற்றிய மகஜர் ஒன்றை கமிட்டிக்கு சமர்ப்பிக்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 29—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6.00, இரவு 9-00)

344 மீ. அல்ட 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமிய நற்சிந்தனை 6-20 தசிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அல்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அல்ட 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 கல்விச் சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 கதைப்பாட்டு, 6-45 வீட்டுவைத்தியர், 7-00 அணிவகுப்பு இசை, 7 30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## பிரதமரின் வாழ்த்துச் செய்தி

கோட்டை, திங்கள்

மோல்டாவின் புதிய பிரதமரும் பொதுநல அமைப்பு விவகார அமைச்சருமான திரு. டொம் மின்ரோவுக்கு பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா வாழ்த்துச் செய்தியனுப்பியுள்ளார்.

## புளியங்கூடல்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தகர்ப்பகிருக மண்டபம், சபாமண்டபம் ஆதியன திருமுருகரது பிள்ளைகளால் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகஞ் செய்விக்கப்பட்டது. பிற்காலத்தில் அவர்மரபில் வந்தவர்களால் முன்கொடித்தம்ப மண்டபம், வசந்தமண்டப முன்கொட்டகை ஆகியன கட்டுவிக்கப்பட்டன. இப்பொழுது கோவில் நிர்வாகம் மேற்படி மரபில் வழிவழி வந்த புளியங்கூடல் கிராம வாசிகளால் நடத்தப்பட்டு வருகிறது. உள்வீதி தெற்கு வீதி கொட்டகை, வசந்த மண்டப முன்கொட்டகை ஆகியன இப்போது நிர்மாணிக்கப்பட்டவை.

புளியங்கூடல் கிராமத்திற்கென உள்ள - சொந்தமான கோவில் "இந்தன் முத்து விநாயகர் ஆலயம் ஒன்றேயாகும். பிள்ளையாரது அருட்பார்வையால் ஊர்காவற்றுறைத் தொகுதியில் "புளியங்கூடல் கிராமம்" பல வழிகளிலும் முன்னேறிய முன்மாதிரிக் கிராமமாக இப்போ திகழ்கிறது.

தற்போதைய நிர்வாக சபை பின்வருமாறு!

தலைவர்: திரு வேலுப்பிள்ளை பேரம்பலம், செயலாளர் திரு பி பொன்னுச்சாமி, தனாதிகாரி: திரு சி இரத்தினம், 8 பேர்கொண்ட நிர்வாக அங்கத்தினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி நிர்வாகத்தின் கீழ் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுள்ள அடியார்களது பண உதவியால் இவ்வாலயம் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை நடைபெறுகிறது. பிரதிஷ்டா குருவாக சிவஸ்ரீ ச சோமசுந்தரக் குருக்கள் கிரிகைகளைச் செய்து வருகிறார்.

நாளை (30 - 6 - 71)

போயாதின

"ஈழநாடு"

வாரமலரில்

★ நான் தோற்றுவிட்டேன் (சிறுகதை)

★ பிரயாணி (தொடர்கதை)

"திருக்கோலத்துடன் காணும் சமக்காரரை சிவனடியார்களோ என்றெண்ணத் தோன்றும்"

—ஏழாலை கிராமத்தின் மாண்புபற்றி எழுதுகிறார் ஆத்மஜோதி ஆசிரியர்

நா. முத்தையா

★ ஈழத்துச் சிதம்பர புராணம் வெளிவர உதவுவீர்

டி. டி. நாணயக்கார

★ பஞ்சாமிர்தம்

★ மாணவர் மலர்

★ குடும்பச்சுடர்

உட்பட மற்றும் சுவையான அம்சங்களுடன்

"பித்தன்" எழுதும்

"பிள்ளையார்தான்..."

# திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை

## யாழ். நகரில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயத்தின் திருப்பணி பற்றியும் அதற்கு நிதி திரட்டுவது பற்றியும் ஆராய்வதற்கு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் பொதுக் கூட்டமொன்று இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் யாழ்ப்பாணம் கல்லூரி வீதியிலுள்ள சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சபைத் தலைவர் திரு. சு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருக்கேதீச்சர ஆலயத்தில் நடைபெற்றுள்ள திருப்பணிகள் பற்றியும் இனிநிறைவேற்றப் படவிருக்கும் திருப்பணிகள் பற்றியும் இதற்கு இந்துக்கள் அளிக்க வேண்டிய உதவியும் ஒத்துழைப்புப் பற்றியும் எடுத்துக் கூறப்படுமெனத் தெரிகிறது.

## தொழில்நுட்ப கல்வித்திட்டம்

பருத்தித்துறை. திங்கள்

தொழில்வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய துறைகளில் தொழிநுட்பக்கல்வி போதிப்பதற்கான ஒருதிட்டத்தை யாழ்ப்பாணக் கல்லூரி உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தை பிரசாரஞ் செய்வதற்காக அடுத்தமாதம் 7-ம் திகதி முற்பகல் 11 மணியளவில் தெல்லியடிப்பட்டின சபைத் தலைவர் திரு. எஸ், பி. தேவசகாயத்தின் இல்லத்தில் ஒரு பிரசாரக் கூட்டம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## நல்லூர் கலாசாலையை மூடாதீர்

பருத்தித்துறை, திங்கள்

பல் நெடுங்காலமாக யாழ்ப்பாணத்தமிழ் மக்களின் தலைநகராக விளங்கும் நல்லூரில் நிறுவப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூடுவதுபற்றி அரசாங்கம் புனராலோசனை செய்வதை இச் சபை விரும்புகிறது.

நேற்று முன்தினம் துன்னாலை வாலிபர் சங்கக்கூட்டமொன்றில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு வி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இதற்கானபலகாரணங்களும்காட்டப்பட்டன.

## நல்லவைசெய்து வாழ்வோம்

அரியாலை, திங்கள்

உண்மை நெறிப்பட்டால் கடவுள் எங்களுடனே இருப்பார். அதனை விடுத்து பொய்மையைப் பேசி வாழ்வதால் பிரயோசனமில்லை. ஆகவே மனிதராகப்பிறந்த நாம் நல்லவை செய்து நல்லவராக வாழ வேண்டும்

என கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்த மாணிக்கவாசகர் குருபூசையில் தலைமையுரையாற்றிய மேற்படி கல்லூரி அதிபர் குறிப்பிட்டார்.

இதையடுத்து பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம், பண்டிதை சசிவம் ஆதியோர் உரையாற்றினர். இறுதியில் திருமதி சரஸ்வதி பாகியராசாவின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

## அறிவித்தல்

எங்களின் 21-6-71-ந் திகதிய 'பணியாளர் தேவை' விண்ணப்பம் சார்பாக அறியத் தருவது. மேற்படி விண்ணப்பதத்தை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கின்றோம் என்பதை அறியத்தருகிறோம்.

பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு ம. நோ. கூ. சங்கம்

2625

## நல்லூ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்

மின்சார வசதிகள் சுகாதாரவசதிகள், பாதுகாப்பு வசதிகள் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டன சென்ற வருடம் போலவே இம்முறையும் சகல ஏற்பாடுகளும் நடத்துவதென இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாயினும் இரவு திருவிழா நேரத்தில் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

இரவு திருவிழா பி.ப 7 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு முடிவடையும் என தீர்மானிக்கப்பட்டது.

திருவிழா பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு முன்புபோல் பொறுப்பாகபொலிஸ் இஸ்பெக்டர் இராசையா நியமிக்கப்பட்டுள்ளார்.

## புகையிலைக் குடில் சாம்பர்!

பருத்தித்துறை திங்கள்

மந்திகையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான குடிலும் அதற்குள் புகைப்போடப்பட்ட புகையிலையும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு எரிந்து சாம்பராயின. தீயை அணைக்க அயலவர் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

## பத்தாண்டுத்திட்டம்

கொழும்பு. திங்கள்

பொருளாதாரத் துறையில் துரித முன்னேற்றம் காணும்வகையில் பத்தாண்டு அபிவிருத்தித் திட்டமொன்றை திட்டமிடல் தொழில்வாய்ப்பு அமைச்சு தயாரித்து வருவதாகத் தெரிகின்றது.

அரசாங்கத்துறை கூட்டுத்தாபனங்கள் தனியார்துறை ஆகிய முத்துறைகளையும் உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் அமையும். உற்பத்தி முதலீடு சம்பந்தமான குறிக்கோள்கள் இத்திட்டத்தில் நிர்ணயிக்கப்படுமென்று தெரிகின்றது.

இவைகள் அதிக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய முறையில் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய வழிமுறைகள் இத்திட்டத்தில் இருக்கும். திட்டம் ஜூலை மாத இறுதிக்குள் தயாராகி விடும் என்று தெரிகின்றது. (சி.பி.ஏ.)

## அன்னதானம் ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

நயினாதீவுநாகபூஷணி அம்பாள் ஆலய யாத்திரிகர்கள் அன்னதான சபையினரின் 12-ம் ஆண்டு அன்னதான ஆரம்பவிழா நாளை நடைபெறுகின்றது. அமுதசுரபி மண்டபத்தில் அன்னதான விழாவை திரு. ஜெ சுபகரன் ஆரம்பித்துவைப்பார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org